**V8T**

**விருதுநகர் மாவட்டம்**

**மூன்றாம் இடைப் பருவத் தேர்வு, பிப்ரவரி - 2024**

www.Padasalai.Net. www.Trb Tnpsc.com of 2.

# வகுப்பு 8

## தமிழ்

நேரம்: 1.30 மணி | மதிப்பெண்கள்: 50

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **7×1=7**

1) அறநெறியில் வாழ்பவர்கள் உயிரைக் கவர வரும் .............க்கண்டு அஞ்சமாட்டார்கள்
   அ) புலனை ஆ) அறனை இ) நமனை ஈ) பலனை

2) மனிதர்கள் தம் ............. தீய வழியில் செல்ல விடாமல் காக்க வேண்டும்.
   அ) ஐந்திணைகளை ஆ) அறுசுவைகளை
   இ) நாற்றிசைகளை ஈ) ஐம்பொறிகளை

3) கல்வியோடு ............. கற்க வேண்டும் என்பது அயோத்திதாசர் கருத்து
   அ) சிலம்பமும் ஆ) கைத்தொழிலும்
   இ) கணிப்பொறியும் ஈ) போர்த்தொழிலும்

4) மக்களின் ஒழுக்கத்துடன் தொடர்புடையது .............
   அ) வானம் ஆ) கடல் இ) மழை ஈ) கதிரவன்

5) முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது .............
   அ) எதுகை ஆ) இயைபு இ) அந்தாதி ஈ) மோனை

6) குணங்கள் + எல்லாம் என்பதனைச் சேர்ந்தெழுதக் கிடைக்கும் சொல் .............
   அ) குணங்கள் எல்லாம் ஆ) குணமெல்லாம்
   இ) குணங்களில்லாம் ஈ) குணங்களெல்லாம்

7) தூக்கி+கொண்டு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .............
   அ) தூக்கிகொண்டு ஆ) தூக்குக்கொண்டு
   இ) தூக்கிக்கொண்டு ஈ) தூக்குகொண்டு

**ஆ) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி: (10வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்கவும்)** **5×2=10**

8) அம்பேத்கர் தன் பெயரை ஏன் மாற்றிக்கொண்டார்?
9) தோல்வி எப்போது தூண்டுகோலாகும்?
10) 'பண்புடையார்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.
11) அயோத்திதாசரிடம் இருந்த ஐந்து பண்புகள் யாவை?
12) பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
13) எது பெருமையைத் தரும்?
14) வேற்றுமை அணி என்றால் என்ன?

**இ) அடி பிறழாமல் எழுதுக:** **1×5=5**

15) 'ஒன்றே குலமும்' எனத் தொடங்கும் மனப்பாடப் பாடலை எழுதுக.

**ஈ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:** **3×4=12**

16) பூமி எப்போது பாதையாகும்?
17) மனிதர்களிடம் குவிந்திருக்கும் பண்புகளாகக் கன்னிப்பாவை நூல் கூறுவனவற்றுள் நற்பண்புகள் யாவை?
18) அயோத்திதாசரின் இதழ்ப்பணி பற்றி எழுதுக.
19) பிறிது மொழிதல் அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**உ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி:** **2×5=10**

20) அன்றாட வாழ்வில் நாம் பிறருக்கு எத்தகைய உதவிகளைச் செய்யலாம்?
21) குணங்குடியான் பராபரத்திடம் வேண்டுவன யாவை?
22) இருவகை அசைகளையும் விளக்குக.

**ஊ) ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி:** **1×6=6**

23) புத்தகம் வாங்கி அனுப்புமாறு உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.
24) மனித யந்திரம் கதையை மீனாட்சி சுந்தரம் கூறுவதாக மாற்றி எழுதுக.

kindly send me your key answer to our email id - Padasalai.net@gmail.com of 2.

----------